## சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ்

## 7.7.2009 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் படித்தளித்த அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகச் சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் பின்வரும் ஓர் அறிக்கையினை அவை முன் வைக்கின்றேன்.

கழக அரசு பொறுப்பேற்ற 13.5.2006 அன்றே விவசாயிகளின் துயர் துடைக்க ரூபாய் 7000 கோடி அளவிற்கான விவசாயக் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்து ஆணையிடப்பட்டது. ஆனால் விவசாயம் சாராத தொழில்களுக்குக் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட கடன்கள் தொழிற்கடன்கள் என்பதால் அவை ரத்து செய்யப்படவில்லை. இவ்வாறு தொழில் சார்ந்த பண்ணை சாராக் கடன்களையும் தள்ளுபடி செய்யக் கோரிக்கை எழுப்பப்பட்டது. இத்தகைய கடன்கள், விசைத்தறி, போக்குவரத்து வாகனங்கள், செங்கல் சூளை போன்ற தொழில்களுக்காகக் கடனாகக் கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்டவை. இக்கடன்களின் மீது, அவை வழங்கப்பட்ட காலத்தில் நடைமுறையில் இருந்த அதிக வங்கி வட்டி வீதத்தையொட்டி 18% வரை கூட்டு வட்டி வசூலிக்கப்பட்டது. மேலும் தவணை தவறிய தொகைக்கு 3% அபராத வட்டியும் வசூலிக்கப்பட்டது.

இவை சொத்து அடமானத்தின் அடிப்படையில் தொழில் செய்வதற்காகப் பெறப்பட்ட கடன் என்பதால், முழுவதும் தள்ளுபடி செய்ய இயலாது என்ற நிலையில், கடன் பெற்றோர் தொடர்ந்து தொழில் செய்திட ஏதுவாகப் புதிய திட்டம் ஒன்று 27.12.2006 அன்று அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி, கடனை உடனடியாகச் செலுத்த முன்வருபவர்களுக்கு அத்தகைய கடன்கள் மீதான கூட்டு வட்டி 18 சதவீதம் வரை இருந்ததை, மாற்றி 31.3.2001 முதலாக 12 சதவீத சாதாரண வட்டி செலுத்தலாம் எனக் குறைக்கப்பட்டது; மேலும் அபராத வட்டியும் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்தச் சலுகைத் திட்டம் 30.6.2009 வரை நடைமுறையில் செயல்படுத்தப்பட்டது.

இந்தச் சலுகைத் திட்டத்தின்கீழ் 31.3.2009 வரை ரூ.509.99 கோடி கடன் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. **இதன் மூலம் கடன் பெற்றவர்கள் ரூ.127.93 கோடி அளவுக்குச் சலுகை பெற்றுள்ளனர்.** 31.03.2009 நிலவரப்படி இன்னமும் ரூபாய் 709.51 கோடி மொத்த கடன் பாக்கி நிலுவையில் உள்ளது.

இந்நிலையில், இத்தகைய பண்ணைசாரா கடன் மீதான வட்டியையாவது தள்ளுபடி செய்து கடனைத் திருப்பிச் செலுத்த உதவ வேண்டுமென்ற கோரிக்கைகள் பல்வேறு தரப்பிலிருந்தும் வலியுறுத்தப்பட்டு வருகின்றன. எனவே அதிக எண்ணிக்கையிலானோர் இத்திட்டத்தைப் பயன்படுத்தி கடன் தீர்வு செய்து கொள்ள வழிவகுத்தால் கூட்டுறவு வங்கிகளும், கடன் பெற்றவர்களும் பயன்பெறுவர் என்பதால், இந்த வட்டி குறைப்பு திட்டத்தின் மூலம் மேலும்

சலுகைகளை அளிக்க அரசு முடிவு செய்து ஒரு சிறப்பு கடன் தீர்வுத் திட்டத்தை பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்படுத்த முடிவெடுத்துள்ளது.

1. புதிய சிறப்பு கடன் தீர்வுத் திட்டத்தின்படி இது 31.3.2007க்குள் இறுதித் தவணை செலுத்த வேண்டி இருந்து அதைக் கட்டத் தவறிய பண்ணை சாராக் கூட்டுறவு கடனுக்கு மட்டுமே பொருந்தும்.
2. கடனைத் திரும்பச் செலுத்த முன்வருபவர்களுக்கு தற்போது வசூலிக்கப்படும் 12% சாதாரண வட்டிக்குப் பதிலாக, **வங்கியில் கடன் பெற்ற தேதியிலிருந்தே 6% சாதாரண வட்டி மட்டுமே வசூலிக்கப்படும். அபராத வட்டியும் இதர செலவுத் தொகையும் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும்.**
3. இத்திட்டத்தின்படி 31.10.2009 நாளுக்குள் வங்கியுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவும், அதன்படி கடன் முழுவதும் திரும்பச் செலுத்த, ஒப்பந்தம் போடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாத காலம் வரையில் மட்டுமே அனுமதிக்கப்படும். ஒப்பந்தப் பத்திரத்தில் கையெழுத்திட்டு 25% தொகையை உடனடியாகச் செலுத்தி, மீதி 75% தொகையை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட மூன்று மாதத்திற்குள்ளாக ஒரு தவணையாகவோ, ஒன்றுக்கும் மேற்பட்டால் மூன்று தவணையாகவோ திரும்பச் செலுத்த வேண்டும்.

**<u>இந்த புதிய வட்டிச் சலுகை திட்டத்தின் மூலம் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் வட்டி இழப்பில், 4% தொகையை மாநில அரசே ஈடுசெய்யும்;</u>** மீதித் தொகையை வங்கிகளே ஏற்கும்.

இந்தப் புதிய சிறப்புக் கடன் தீர்வுத் திட்டத்தின்கீழ் வட்டி குறைப்பு மூலம் உத்தேசமாக ரூ.144.62 கோடியும், அபராத வட்டி தள்ளுபடி மூலம் ரூ.101.98 கோடியும், இதர செலவுத் தள்ளுபடி மூலம் ரூ.4.61 கோடியும் ஆகமொத்தம் ரூ.251.21 கோடி அளவிற்குத் தள்ளுபடி செய்வதால் அதன் மூலம் ஒரு இலட்சத்து முப்பத்திரெண்டாயிரம் பேர் பயனடைவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.